மாமன்றக் கூட்டம்

கோப்பு எண்	-	**ந.க.எண் 1575/2020/ எம்.சி. 8**
நாள்	-	**20.03.2020 காலை 11.00 மணி**
தலைமை	-	**திரு.ஜெ.ஷ்ரவன்குமார், இ.ஆ.ப., ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி, கோயம்புத்தூர் மாநகராட்சி**
கலந்துகொண்டோர்	-	**துணை ஆணையர், அனைத்து துறை தலைமைகள், அனைத்து மண்டல உதவி ஆணையர்கள்**

பொருள் எண் 1

பார்வை: நிர்வாகப்பொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், கோயம்புத்தூர் கோட்டம் கடிதம் ந.க.எண்.454/AE(P)/2020, நாள்.19.02.2020.

****

பார்வையில் காண் கடிதத்தில், உக்கடம் பகுதியில் நெடுஞ்சாலைத்துறையின் மூலம் உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணிக்காக, சி.எம்.சி. காலனி பகுதியில் குடிசைகள் அமைத்து வசித்து வரும் 700 ஏழை எளிய குடிசைவாசிகளை அப்புறப்படுத்தவும், அவர்களுக்கு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் ஒதுக்கீடு செய்துதர வேண்டியும், மாற்று இடமாக கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் எல்லைக்குட்பட்ட வெரைட்டி ஹால் ரோடு திட்டப்பகுதிக்கு அருகில் உள்ள வார்டு எண்.2, பிளாக் எண்.3, T.S.No.126/1ல் உள்ள 6.889 ஏக்கர் பரப்பளவு கொண்ட மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தினை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு வழங்கப்படுவதாக மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளதன் அடிப்படையில், ஆக்கிரமிப்புதாரர்களை காலி செய்து மேற்கண்ட இடத்தில் பிரதம மந்திரியின் ''அனைவருக்கும் வீடு'' (PMAY – HFA) திட்டத்தின் கீழ் 1000 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டி மறுகுடியமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து மேற்படி இடத்தினை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நிலஉரிமை மாற்றம் செய்ய வேண்டியும், நிலஉரிமை மாற்றத்தை முன்னிறுத்தி திட்டப்பிரேரணைகள் தயார் செய்வதற்கும் பிற நடவடிக்கைகளுக்கும் ஏதுவாக முன்நுழைவு அனுமதி வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ள மேற்படி வெரைட்டி ஹால் ரோடு திட்டப்பகுதிக்கு அருகில் உள்ள வார்டு எண்.2, பிளாக் எண்.3, T.S.No.126/1ல் உள்ள 6.889 ஏக்கர் பரப்பளவு கொண்ட மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில், பிரதம மந்திரியின் ''அனைவருக்கும் வீடு'' (PMAY – HFA) திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் குடியிருப்புகள் கட்டி ஆக்கிரமிப்பாளர்களை மறுகுடியமர்த்த குடியிருப்புகளை ஒதுக்கீடு செய்யும் பொருட்டு, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நிலஉரிமை மாற்றம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பவும், நிலஉரிமை மாற்றத்தை முன்னிறுத்தி, திட்டப்பிரேரணைகள் தயார் செய்வதற்கும் பிற நடவடிக்கைகளுக்கும் ஏதுவாக தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.1214/2020/எம்.எச்.5

மாநகர மன்ற தீர்மானம் எண் 205 நாள் 20.03.2020

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பொருள் எண் 2

பொருள்: குத்தகை இனங்கள் - கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் வருடாந்திர குத்தகை இனங்கள் 2020-21-ம் ஆண்டிற்கு குத்தகைதாரர்களுக்கு 5% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் மற்றும் சம்மத கடிதம் வழங்கப்படாத இனங்களை மறுஏலம் கொண்டு வரவும், மூன்றாண்டு முடிவுற்ற இனங்களுக்கு பொதுஏலம் கோரவும் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை எண்.78 நாள்.25.5.2009.
2. மாமன்ற தீர்மான எண்.247 நாள்.25.10.2013.

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட குத்தகை இனங்கள் பார்வையில் காணும் அரசாணையின்படி, 2018-2019 ல் ஏலம் விடப்பட்டு உயர்ந்தப்பட்ச ஏலதாரருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது. 2020-21 மூன்றாம் ஆண்டிற்கு 5% உயர்வு செய்து குத்தகைத்தொகையாக நிர்ணயம் செய்யவும் மற்றும் மூன்றாண்டு முடிவுற்ற இனங்களுக்கு பொது ஏலம் கோரும் விவரமும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

அ) மூன்றாம் ஆண்டிற்கு 5% உயர்வு செய்யப்பட வேண்டிய குத்தகை இனங்கள்

வ எண்	வ.வி எண்.	ஏலதாரர் பெயர்	குத்தகை இனங்கள்	குத்தகை காலம்	2019-20-ம் இரண்டாம் ஆண்டிற்கான குத்தகை தொகை ரூ.	2020-21-க்கு இரண்டாம் ஆண்டிற்கான குத்தகை தொகையில் 5% உயர்வுக்குபின் குத்தகை ரூ.
1	21	திரு. S.காளியப்பன்	மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மார்க்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமம்	2020-21	ரூ.68,98,500/-	ரூ.72,43,425/-
2	14	திரு. M.பழனிசாமி	பன்னீர் செல்வம் பூமார்க்கெட் சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமம்	2020-21	ரூ.26,90,100/-	ரூ.28,24,605/-
3	82	திரு. அ.மோகன்ராஜ்	வடவள்ளி வாரசந்தை கட்டணம் வசூலிக்கும் உரிமம்	2020-21	ரூ.2,63,025/-	ரூ.2,76,176/-
4	84	திரு. அ.மோகன்ராஜ்	வடவள்ளி தினசரி சந்தை கட்டணம் வசூலிக்கும் உரிமம்	2020-21	ரூ.1,82,438/-	ரூ.1,91,560/-
5	19	திரு.S. மதியழகன்	பன்னீர் செல்வம் பூமார்க்கெட் கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம்	2020-21	ரூ.17,64,000/-	ரூ.18,52,200/-
6	22	திரு. S.காளியப்பன்	மேட்டுப்பாளையம் ரோடு அண்ணாமார்க்கெட் கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்	2020-21	ரூ.6,37,875/-	ரூ.6,69,770/-
7	105	திரு.S. சை.ஃபுதீன்	மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையத்தில் தரை தளத்தில் உள்ள ஆண்கள் பெண்கள் நவீன கட்டணக் கழிப்பிடம் கட்டண வசூலிக்கும் உரிமம்	2020-21	ரூ.6,52,050/-	ரூ.6,84,653/-
8	24	திரு.S. கோவிந்தராஜ்	மேட்டுப்பாளையம் ரோடு MGR மொத்தக காய்கறி மார்க்கெட் இரண்டு கட்டணக் கழிப்பிடம் கட்டண வசூலிக்கும் உரிமம்	2020-21	ரூ.7,92,750/-	ரூ.8,32,388/-

9	26	திரு. A.மகாராஜா	மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையத்தில் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்	2020-21	ரூ.10,44,074/-	ரூ.10,96,278/-
10	83	திரு.R. ராஜன்	கவுண்டம்பாளையம் ஆடு அறுமனை கட்டண வசூலிக்கும் உரிமம்	2020-21	ரூ.1,07,315/-	ரூ.1,12,681/-

ஆ) பொது மின் ஏலத்திற்கு சேர்க்கப்பட வேண்டிய குத்தகை இனங்கள்

வ. எண்	வரி விதிப்பு எண்	குத்தகை இனங்கள்	2017-18 ஆண்டிற்கான குத்தகை தொகை	2018-19 ஆண்டிற்கான குத்தகை தொகை	2019-20 ஆண்டிற்கான குத்தகை தொகை	(2017-18, 2018-19, 2019-20) மூன்றாண்டு சராசரி மதிப்பு	2019-20-ம் ஆண்டு ஏலத் தொகையில் 5% உயர்வுக்கு பின் குத்தகை ரூ.	குறிப்பு
1	25	மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையம் பேருந்து நுழைவு கட்டணம் வசூல் மற்றும் குளிரூட்டப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் ஓய்வறை கட்டணம் வசூலிக்கும் உரிமம்	1100700	1155735	1213522	1156652	1274198	
2	103	மருதமலை அடிவாரத்தில் உள்ள மாநகராட்சி நவீன கட்டண கழிப்பிடம் வசூலிக்கும் உரிமம்	85000	89250	93713	89321	98400	
3	15	தடாகம் ரோடு வாழைக்காய் மண்டி மார்க்கெட் சுங்கம் வசூலிக்கும் உரிமம்	310555	326083	342387	326342	359506	
4	18	காந்திபார்க் பூங்காவில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்	310500	326025	342326	326284	359442	

உரிமம் புதுப்பிக்க சம்மதம் தெரிவிக்கும் குத்தகைதாரருக்கு அ-வில் குறிப்பிட்டுள்ள குத்தகையினங்களை 2019-20-ம் ஆண்டிற்கான ஏலத்தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்து 2020-21-ம் ஆண்டிற்கான குத்தகைத்தொகையாக நிர்ணயம் செய்யவும், உரிமம் புதுப்பிக்க சம்மதம் தெரிவிக்காத குத்தகைதார்களின் உரிமத்தை ரத்து செய்து, அவர்களது வைப்புத்தொகையை பறிமுதல் செய்து கருப்பு பெயர் பட்டியலில் பெயர் சேர்க்கவும் அவ்வினங்களை மறுஏலம் கொண்டுவரவும்,

ஆ-வில் உள்ள இனங்களுக்கு பொதுமின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி செய்தித்தாளில் அறிவிப்பு செய்வதற்கும், அதற்குண்டான செலவின தொகையினை பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டி கோப்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

உரிமம் புதுப்பிக்க சம்மதம் தெரிவிக்கும் குத்தகைதாரருக்கு அ மற்றும் ஆ -வில் குறிப்பிட்டுள்ள குத்தகையினங்களை 2018-19-ம் ஆண்டிற்கான ஏலத்தொகையில் 5 % உயர்வு செய்து 2019-20-ம் ஆண்டிற்கான குத்தகைத்தொகையாக நிர்ணயம் செய்யவும், உரிமம் புதுப்பிக்க சம்மதம் தெரிவிக்காத குத்தகைதாரர்களின் உரிமத்தை ரத்து செய்து, அவர்களது வைப்புத்தொகையை பறிமுதல் செய்து கருப்பு பெயர் பட்டியலில் பெயர் சேர்க்கவும் அவ்வினங்களை மறுஏலம் கொண்டுவரவும், ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் உத்திரவின் படி மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 1610 /2018/அ1(மே)

மாநகர மன்ற தீர்மானம் எண் 206 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 3

கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - வார்டு எண் 72-க்குட்பட்ட வ.உ.சி. பூங்கா வளாகத்தில் உள்ள பழுதடைந்த கிணற்றுநீர் தரைமட்டத்தொட்டியை திரும்ப கட்டுதல் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, உள்ள கிணற்று சீர் தொட்டி பழுதடைந்துள்ளதால் நீரினை சேமிக்க முடியவில்லை. தண்ணீர் பற்றாக்குறையால் பூங்காவிலுள்ள செடிகள் கருகும் சூழ்நிலை உள்ளது. எனவே, இப்பணி மிகவும் அவசர அவசியமாகும்.

வ.எண்.	கோப்பு எண்	பணியின் பெயர்	மதிப்பீடு தொகை (இலட்சத்தில்)
1	1387/2020/எம்.டி.5	வார்டு எண் 72 -க்குட்பட்ட வ.உ.சி. பூங்கா வளாகத்தில் உள்ள பழுதடைந்த கிணற்றுநீர் தரைமட்டத்தொட்டியை திரும்ப கட்டுதல் பணிக்கு	5.60

மேற்கண்ட பட்டியலில் உள்ள பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :அனுமதிக்கலாம் ந.க.எண்.1387/2020/எம்.டி.5

மாநகர மன்ற தீர்மானம் எண் 207 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 4

கோயமுத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் :32 - க்குட்பட்ட சேரன் மாநகர் 4வது பேருந்து நிறுத்தம் (வடக்கு மற்றும் தெற்கு பகுதி),2வது மற்றும் 3வது பேருந்து நிறுத்தம் ஆகிய பகுதியில் உள்ள சாலைகளில் குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் வீட்டு இணைப்பு குழாய்கள் இணைக்கப்பட்டுள்ளது இதனால் தற்போது இப்பகுதி சாலைகள் மிகவும் சேதம் அடைந்துள்ளாதால் இப்பகுதிகளில் விபத்து மற்றும் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்ப்படுகிறது. மேலும் மழைகாலங்களில் இச்சாலை பயன்படுத்த இயலாத நிலை ஏற்படுகிறது. எனவே இப்பகுதியில் உள்ள பொது மக்கள் கோரிக்கைக்கு ஏற்பவும் அவசியம் கருதியும் மேற்குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள பழுதடைந்த சாலைகளுக்கு மறுதார்தளம் அமைக்கும் பணிக்கு கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

வ.எண்	**வார்டு எண்**	**வேலையின் பெயர்**	**மதிப்பீடு ரூபாய் (இலட்சத்தில்)**
1	32	வார்டு எண்32- க்குட்பட்ட சேரன் மாநகர் 4வது பேருந்து நிறுத்தம் (வடக்கு மற்றும் தெற்கு பகுதி),2வது மற்றும் 3வது பேருந்து நிறுத்தம் பகுதியில் மறுதார்தளம் அமைக்கும் பணி (ந.க.எண்: 1346 /2020/எம்டி3)	98.00

எனவே தயாரிக்கப்பட்ட இம்மதிப்பீடு பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண்- 1346 /2020/ எம்டி3

மாநகர மன்ற தீர்மானம் எண் 208 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 5

கோயமுத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் :32 - க்குட்பட்ட சேரன் மாநகர்,சக்தி கார்டன்,மலர் அவின்யூ மற்றும் அம்பாள்நகர் ஆகிய பகுதியில் உள்ள சாலைகளில் குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் வீட்டு இணைப்பு குழாய்கள் இணைக்கப்பட்டுள்ளது இதனால் தற்போது இப்பகுதி சாலைகள் மிகவும் சேதம் அடைந்துள்ளாதால் இப்பகுதிகளில் விபத்து மற்றும் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்ப்படுகிறது. மேலும் மழைகாலங்களில் இச்சாலை பயன்படுத்த இயலாத நிலை ஏற்படுகிறது. எனவே இப்பகுதியில் உள்ள பொது மக்கள் கோரிக்கைக்கு ஏற்பவும் அவசியம் கருதியும் மேற்குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள பழுதடைந்த சாலைகளுக்கு மறுதார்தளம் அமைக்கும் பணிக்கு கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

வ.எண்	வார்டு எண்	வேலையின் பெயர்	மதிப்பீடு ரூபாய் (இலட்சத்தில்)
1	32	வார்டு எண்32- க்குட்பட்ட மலர் அவின்யூ,அம்பாள் நகர் மற்றும் சேரன் மாநகர் - குமுதம் நகர் இணைப்பு சாலை பகுதியில் மறுதார்தளம் அமைக்கும் பணி ந.க.எண்: 1344 /2020/எம்டி3	96.00

எனவே தயாரிக்கப்பட்ட இம்மதிப்பீடு பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண்- 1344 /2020/ எம்டி3

மாநகர மன்ற தீர்மானம் எண் 209 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 6

பொருள் : பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - வார்டு எண் 75-க்குட்பட்ட நஞ்சுண்டாபுரம் எரிவாயு தகன மேடை - ஈஷா பவுண்டேசன் அறக்கட்டளை – பராமரிப்பு காலம் நீட்டிப்பு செய்வது - தொடர்பாக.

பார்வை :

1. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண் 228,நாள் - 13.11.2008.
2. மாமன்ற தீர்மானம் எண் 207, நாள் - 05.01.2011.
3. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்- 3441/2011/தி2/ நாள் - 12.05.2011.
4. ஈஷா பவுண்டேசன் தனியார் நிறுவனம் கடிதம் நாள் - 11.01.2017.
5. மாமன்ற தீர்மான எண் - 357 மற்றும் நாள் - 25.01.2017.
6. ஈஷா பவுண்டேசன் தனியார் நிறுவனத்தின் கடிதம் இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள் - 17.02.2020.

கோயம்பத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 75-க்குட்பட்ட நஞ்சுண்டாபுரம் சாலையில் உள்ள மாநகராட்சி எரிவாயு தகன மேடையை பராமரிக்க தனியார் அறக்கட்டளை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வழங்க பார்வை (1)-ல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பார்வை (2)-ல் காணும் மாமன்ற தீர்மானத்தில் ஈஷா பவுண்டேசன் தனியார் அறக்கட்டளைக்கு பார்வை (3)-ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையாளர். சென்னை அவர்களின் கடிதத்தில் அனுமதி பெற்று மூன்று வருடங்களுக்கு ஒப்படைக்கப்பட்டது.

பார்வை (4)-ல் காணும் ஈஷா பவுண்டேசன் தனியார் அறக்கட்டளை நிறுவனத்திற்கு பிப்ரவரி 2011 அன்று பராமரிப்பு பணி ஒப்படைப்பு செய்யப்பட்டது. பராமரிப்பு காலம் பிப்ரவரி 2017 உடன் முடிவடைந்ததால், பார்வை (5)-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி மூன்று வருடங்களுக்கு பிப்ரவரி 2020 வரை பராமரிப்பு பணி ஒப்படைப்பு செய்யப்பட்டது. பராமரிப்பு காலம் பிப்ரவரி 2020 உடன் முடிவடைவதால் பார்வை (6)-ல் காணும் ஈஷா பவுண்டேசன் அவர்களது கோரிக்கையின்படி பராமரிப்புக் காலத்தை மேலும் மூன்று வருடங்களுக்கு நீட்டிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் : 288/2017/கிடி1

மாநகர மன்ற தீர்மானம் எண் 210 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 7

கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - வார்டு எண் 25-க்குட்பட்ட தேவாங்க பேட்டை வீதி எண் 1-ல் ஏற்கனவே உபயோகத்தில் உள்ள பழுதடைந்த பாதாள சாக்கடை குழாய்களை மாற்றியும், பழுதடைந்த சேம்பர்களை திரும்ப கட்டுதல் பணிக்காகவும் ரூ.21.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. குழாய்கள் பழுதடைந்துள்ளதால் கழிவுநீர் செல்வதில் தடையேற்ப்பட்டுள்ளது. எனவே, இப்பணி மிகவும் அவசர அவசியமாகும்.

மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண்.1494/2020/எம்.டி.5

மாநகர மன்ற தீர்மானம் எண் 211 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - வார்டு எண் 72-க்குட்பட்ட செல்லப்பகவுண்டர் வீதி,கடலைகார சாலை 1,2 மற்றும் அனுப்பபர்பாளையம் பகுதியில் உள்ள பழுதடைந்த பாதாளசாக்கடை குழாய்கள் மாற்றியமைத்தல், பாதாளசாக்கடை சேம்பர்கள் உயர்த்தி கட்டுதல் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணி மிகவும் அவசர அவசியமாகும்.

வ.எண்	கோப்பு எண்	பணியின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்)
1.	1493/2020/எம்.டி.5	வார்டு எண் 72-க்குட்பட்ட செல்லப்பக்கவுண்டர் வீதி மற்றும் கடலைகார சாலைகளில் 1,2 அனுப்பர்பாளையம் பகுதியில் உள்ள பழுதடைந்த பாதாளசாக்கடை குழாய்கள் மாற்றியமைத்தல், பாதாள சாக்கடை சேம்பர்கள் உயர்த்தி கட்டுதல் பணிக்கு	ரூ.6.20

மேற்கண்ட பட்டியலில் உள்ள பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :அனுமதிக்கலாம் ந.க.எண்.1493/2020/எம்.டி.5

மாநகர மன்ற தீர்மானம் எண் 212 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 9

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.68க்குட்பட்ட வார்டிலுள்ள குடியிருப்புகளில் சேகரமாகும் மக்கும் கழிவுகளை அதே வார்டிலுள்ள வள்ளியம்மாள் வீதியிலுள்ள பொது ஒதுக்கீடு இடத்தில் மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர்களை (Micro Composting Centers) நிறுவி அவற்றில் பொது மக்களின் முழு பங்களிப்புடன் பரவலாக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை (Decentralized Solid Waste Management) முறையில் மேற்படி சேகரமாகும் மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க கட்டுமான பணிகள் தற்சமயம் நடைபெற்று வருகிறது. மேற்கூறிய மைக்ரோ கம்போஸ்டிங் சென்டரில் பரிட்சார்த்த முறையில் 3 மெட்ரிக் டன் கொள்ளளவிலான கொள்கலன் மயமான உயிரி எரிவாயு ஆலை (Containerized Biogas Plant) நிறுவும் பணிக்கு ரூ.64.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் : 1557 /2020/ஜே.என்.5

மாநகர மன்ற தீர்மானம் எண் 213 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 10

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.13க்குட்பட்ட வார்டிலுள்ள குடியிருப்புகளில் சேகரமாகும் மக்கும் கழிவுகளை அதே வார்டிலுள்ள வெங்கிட்டாபுரம் பகுதியில் உள்ள பொது ஒதுக்கீடு இடத்தில் மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர்களை (Micro Composting Centers) நிறுவி அவற்றில் பொது மக்களின் முழு பங்களிப்புடன் பரவலாக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை (Decentralized Solid Waste Management) முறையில் மேற்படி சேகரமாகும் மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க கட்டுமான பணிகள் தற்சமயம் நடைபெற்று வருகிறது. மேற்கூறிய மைக்ரோ கம்போஸ்டிங் சென்டரில் பரிட்சார்த்த முறையில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான கொள்கலன் மயமான உயிரி எரிவாயு ஆலை (Containerized Biogas Plant) நிறுவும் பணிக்கு ரூ.98.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் : 1558 /2020/ஜே.என்.5

மாநகர மன்ற தீர்மானம் எண் 214 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 11

பொருள்: பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – திருமதி. விஜயலட்சுமி, உதவி செயற்பொறியாளர்(திட்டம்), கோயம்புத்தூர் மாநகராட்சி – சேலம் மாநகராட்சிக்கு அயற்பணி அடிப்படையில் 3 வருட காலத்திற்கு மாற்றம் செய்யக்கோரியது – தொடர்பாக

பார்வை:
1. மாமன்ற தீர்மானம் எண்.355, நாள்.20.09.2018
2. ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களின் இதே எண்ணிட்ட செயல்முறை ஆணை நாள். 20.09.2018.
3. திருமதி. விஜயலட்சுமி, உதவி செயற்பொறியாளர்(திட்டம்), மத்திய மண்டலம் அவர்களின் விண்ணப்பம் நாள்.19.02.2020
4. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.28.02.2020

———————

திருமதி.ஜி.விஜயலட்சுமி, இளநிலைபொறியாளர், சேலம் மாநகராட்சி அவர்கள் பார்வை 1ல் காணும் மாமன்ற தீர்மானத்தின்படியும், பார்வை 2ல் காணும் ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணையின்படியும் இம்மாநகராட்சியில் உதவி செயற்பொறியாளர் (திட்டம்) பணியிடத்தில் 27.09.2018 அன்று முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளார்.

இந்நிலையில் திருமதி.ஜி. விஜயலட்சுமி, உதவி செயற்பொறியாளர்(திட்டம்) அவர்கள் தனது குடும்ப சூழ்நிலை காரணமாகவும், தன்னுடைய வயதான தாய், தந்தையர் சேலம் ஆச்சாங்குட்டிபட்டி கிராமத்தில் தனியாக வசித்து வருவதாகவும், அவர்கள் நோய்வாய்பட்டு, சிரமப்படுவதால் கோயம்புத்தூரில் இருந்து அவர்களை கவனிக்க இயலாத சூழ்நிலை உள்ளதாகவும் தெரிவித்து தன்னை சேலம் மாநகராட்சிக்கு அயற்பணி அடிப்படையில் மூன்று வருட காலத்திற்கு மாற்றக்கோரி பார்வை 5ல் காணும் 19.02.2020-ம் தேதிய விண்ணப்பத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே திருமதி.ஜி. விஜயலட்சுமி, உதவி செயற்பொறியாளர்(திட்டம்) அவர்களின் குடும்ப சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு அவரை சேலம் மாநகராட்சிக்கு அயற்பணி அடிப்படையில் (On Deputation) மூன்று வருடங்களுக்கு மாற்றம் செய்ய மாமன்றம் ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்குப்பின் மேற்படி தீர்மானத்தை நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு அனுப்பி வைக்கலாம்.

ந.க.எண். 7551 /2018/எம்சி1

மாநகர மன்ற தீர்மானம் எண் 215 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 12

பொருள்-	சாதாரண உள்ளாட்சித் தேர்தல்கள் - நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான ஆன்லைன் புகைப்பட வாக்காளர் பட்டியல்கள் தயாரித்தல் - சிறப்பு சுருக்க திருத்திய நிறைவு செய்யப்பட்ட சட்டமன்ற வாக்காளர் பட்டியல்கள் 2020-ன் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வாக்காளர் பட்டியல்கள் தயார் செய்தல் - சட்டமன்ற வாக்காளர் பட்டியல்களின் வன்நகல்கள் (Hard copies) பெற்று மறுவரையறை செய்யப்பட்ட புதிய வார்டு வாரியாக தொடர்புபடுத்தும் விபரப்பட்டியல் (Correlation Statement) தயாரித்தல் - வாக்குச்சாவடி பட்டியல் கண்டறியப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக
பார்வை-	செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை அவர்களால் மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதம் ந.க.எண் 639/2020/ தே.பொ. 1 நாள் 13.02.2020

பார்வையில் காணும் செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ள அறிவுரைகளின்படி, 14.02.2020ம் தேதியன்று வெளியிடப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட ஆறு சட்டமன்றத் தொகுதிகளின் (117 கோயம்புத்தூர் வடக்கு, 118 கவுண்டம்பாளையம், 119 தொண்டாமுத்தூர், 120 கோயம்புத்தூர் தெற்கு, 121 சிங்காநல்லூர், 122 கிணத்துக்கடவு ஆகிய சட்டமன்றத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு, கோயம்புத்தூர் மாநகராட்சி உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்குச்சாவடி பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, கோயம்புத்தூர் மாநகராட்சி மறுவரையறை செய்யப்பட்ட 100 வார்டுகளுக்கு 1245 வாக்குச்சாவடிகள் என கண்டறியப்பட்டுள்ளது.

பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ள அறிவுரைகளின்படி, கோயம்புத்தூர் மாநகராட்சி மறுவரையறை செய்யப்பட்ட 100 வார்டுகளுக்கு 1245 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி அமைக்கப்பட்ட வாக்குச்சாவடிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 287/2020/எம்சி. 8

மாநகர மன்ற தீர்மானம் எண் 216 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 13

கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - வார்டு எண் 25-க்குட்பட்ட சீத்தாலட்சுமி மகப்பேறு மருத்துவமனையில் (S.L.M Home)–தேசிய நகர்புற சுகாதார திட்டம் (NUHM) நகர சமூக சுகாதார மையமாக மேம்படுத்த வாஷ் ஏரியா மற்றும் சி.எஸ்.எஸ்.டி (Central Sterilization and Supply Depot) கட்டிட கட்டுமான பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இது மத்திய அரசின் திட்டப்பணிகளில் ஒன்றாகும்.

வ.எண்	பணியின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்)
1	வார்டு எண் 25-க்குட்பட்ட சீத்தாலட்சுமி மகப்பேறு மருத்துவமனையில் (S.L.M Home)–தேசிய நகர்புற சுகாதார திட்டம் (NUHM) நகர சமூக சுகாதார மையமாக மேம்படுத்த வாஷ் ஏரியா மற்றும் சி.எஸ்.எஸ்.டி (Central Sterilization and Supply Depot) கட்டிட கட்டுமான பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இது மத்திய அரசின் திட்டப்பணிகளில் ஒன்றாகும்.	37.50

மேற்கண்ட பணி நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.1832/2020/எம்.டி.5

மாநகர மன்ற தீர்மானம் எண் 217 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 14

கோயம்புத்தூர் மாநகராட்சியில் பொது நிதியின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பல்வேறு பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஆணையர் மற்றும் தனி அதிகாரி அவர்களது நிர்வாக அனுமதி பெற்றதனைத் தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. அதில் கீழ்க்கண்ட நிறுவனங்கள் கலந்து கொண்டு அவர்களது ஒப்பந்தப்புள்ளிகளை கொடுத்திருந்தினர். அதன் விபரம் பின் வருமாறு:

வ. எண்.	பணியின் பெயர்	ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை	ஒப்பந்ததாரரின் பெயர்	ஒப்பந்ததாரர் கோரிய தொகை	ஒப்பந்தப்புள்ளி ஏற்கும் தொகை
1	வெள்ளலூர் குப்பைக்கிடங்கில் ஏற்படும் தீ விபத்துக்களை அணைப்பதற்கு தண்ணீர் டேங்கர் லாரிகளை (Water Tanker Lorries) ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்துதல் ந.க. எண் 7658/ 2019 / ஜே.என்5	ரூ. 9,90,000/–	1. தி/ள். எம் . எஸ் இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர்.	ரூ.11,10,000/– (ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கு 12.12 % கூடுதல்)	ஏற்கப்படவில்லை
			2. தி/ள். ஜே எஸ் அசோசியேட்ஸ் டெவலப்மெண்ட் இந்தியா பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர்.	ரூ. 10,35,000/– (ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கு 4.55 % கூடுதல்)	ரூ. 9,87,000/– (விலை குறைப்பிற்கு பின்னர் 0.30 % குறைவு)
2	கோயம்புத்தூர் மாநகராட்சி வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் பூச்சி மருந்து தெளிக்க மூலிகை மருந்துகளை விநியோகம் செய்தல் ந.க. எண் 7659/ 2019 / ஜே.என்5	ரூ. 9,90,000/–	1. தி/ள். எம் . எஸ் இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர்.	ரூ. 10,19,520/– (ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கு 8.47 % கூடுதல்)	ஏற்கப்படவில்லை
			2. தி/ள். ஜே எஸ் அசோசியேட்ஸ் டெவலப்மெண்ட் இந்தியா பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர்.	ரூ. 9,85,005/– (ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கு 4.80 % கூடுதல்)	ரூ. 9,23,940/– (விலை குறைப்பிற்கு பின்னர் 1.69 % குறைவு)

மேலே குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு மதிப்பீட்டு தொகைக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளிகளை கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம். ந.க.எண். 7658/ 2019 / ஜே.என்5

மாநகர மன்ற தீர்மானம் எண் 218 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 15

கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - வார்டு எண் 73-க்குட்பட்ட ஸ்டேட் வங்கி சாலையில் கிழபுறம் உள்ள மழைநீர் வடிகாலை திரும்ப கட்டி மூடுபலகைகள் அமைத்தல் பணிக்கு ரூ.40,00,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.1528/2020/எம்.டி.5

மாநகர மன்ற தீர்மானம் எண் 219 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 16

கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம்- வார்டு எண்51க்குட்பட்ட மாரியம்மன் கோவில் வீதி மற்றும் காந்திபுரம் 7-வது வீதிகளில் பழுதடைந்த பாதாள சாக்கடை பிரதான குழாயை அகற்றி புதியதாக குழாய் பதித்தல் மற்றும் பாதாள சாக்கடை தொட்டி அமைத்து அச்சாலைகளை புதுப்பித்தல் பணிக்கு ரூ.49,00,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.1527/2020/எம்.டி.5

மாநகர மன்ற தீர்மானம் எண் 220 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 17

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணியினை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

வ எண்	பணியின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில்	நிர்வாக அனுமதி நாள்	ஒப்பந்தப் புள்ளி நாள்	பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள்	தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்
1.	வார்டு எண்.3க்குட்பட்ட பகுதிகளில் ஆழ்குழாய் கிணறுகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் ந.க.எண்.10891/2019/எம்.டி.2	7.00	ம.தீஎண் 351 நாள். 22.11.19	31.01.20 முதலாம் அழைப்பு	1).திருமதி.டி.ரோசி மதிப்பீட்டுத்தொகை 2).தி/ள்.பிஏடி எண்டர்பிரைசஸ் 0.17% குறைவு 3).திரு.கே.சுந்தரம் மதிப்பீட்டுத்தொகை 4). திரு.எஸ்.சிவராஜ் 0.26% குறைவு	திரு.எஸ்.சிவராஜ் 0.26% குறைவு

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்த புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- **அனுமதிக்கலாம்** ந.க.எண்.10891/2019/எம்.டி.2

மாநகர மன்ற தீர்மானம் எண் 221 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 18

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் பொறியியல் பிரிவு வார்டு எண் 41க்குட்பட்ட ஆசிஷ் நகர், லட்சுமி நகர், வ.உ..சி நகர் மற்றும் சர்ச் சாலை பகுதிகளில் ஆழ்குழாய் கிணறு மற்றும் விநியோகக்குழாய் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்.

வ. எண்	வார்டு எண்	பணிகளின் பெயர்	மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)
1.	41	வார்டு எண் 41க்குட்பட்ட ஆசிஷ் நகர், லட்சுமி நகர், வ.உ..சி நகர் மற்றும் சர்ச் சாலை பகுதிகளில் ஆழ்குழாய் கிணறு மற்றும் விநியோகக்குழாய் அமைத்தல். (ந.க.எண் 1837 / 2020/MD2)	13.00

மேற்கண்ட பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 1837 / 2020/MD2

மாநகர மன்ற தீர்மானம் எண் 222 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 19

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் பொறியியல் பிரிவு வார்டு எண் 41 க்கு உட்பட்ட டெக்ஸ்டூல் சுப்பரமணியம் நகரிலுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பூங்கா அமைத்து தருமாறு பொதுமக்கள் தெரிவிக்கப்பட்ட கோரிக்கையின் பேரிலும் இம்மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்.

வ. எண்	வார்டு எண்	பணியின் பெயர்	மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)
1.	41	வார்டு எண் 41 க்குட்பட்ட டெக்ஸ்டூல் சுப்பரமணியம் நகரிலுள்ள மாநகராட்சிக்கு செந்தமான பொது ஒதுக்கீட்டு இடத்தில் சுற்றுசுவர் மற்றும் பூங்கா அமைத்தல். (ந.க.எண் 1840 / 2020/MD2).	50.00

மேற்கண்ட பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் ந.க.எண்;. 1840 / 2020/MD2

மாநகர மன்ற தீர்மானம் எண் 223 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 20

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் பொறியியல் பிரிவு வார்டு எண் 41க்கு உட்பட்ட நந்தவனதோட்டம் 1,2 & 3வது மற்றும் பாரதியார் பிரதான சாலை பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்.

வ. எண்	வார்டு எண்	பணிகளின் பெயர்	மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)
1.	41	வார்டு எண் 41க் குட்பட்ட நந்தவனதோட்டம் 1,2 & 3வது மற்றும் பாரதியார் பிரதான சாலை பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல். (ந.க.எண் 1842 / 2020/MD2)	60.00

மேற்கண்டபணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் ந.க.எண் 1842 / 2020/MD2

மாநகர மன்ற தீர்மானம் எண் 224 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 21

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் பொறியியல் பிரிவு வார்டு எண் 41க்குட்பட்ட ராஜா நகர் பகுதியில் சுற்றுசுவர் மற்றும் பூங்கா அமைத்தல் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்.

வ. எண்	வார்டு எண்	பணிகளின் பெயர்	மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)
1.	41	வார்டு எண் 41க் குட்பட்ட ராஜா நகர் பகுதியில் சுற்றுசுவர் மற்றும் பூங்கா அமைத்தல். (ந.க.எண் 1841 / 2020/MD2)	50.00

மேற்கண்டபணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1841 2020/MD2

மாநகர மன்ற தீர்மானம் எண் 225 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 22

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் பொறியியல் பிரிவு வார்டு எண் 41 க்கு உட்பட்ட பாரதி நகர் 5வது வீதி பகுதியில் பாலம் மற்றும் தடுப்புச்சுவர் அமைத்து தருமாறு 26.06.2019 அன்று ஆணையாளர் அவர்கள் தலைமையில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பாலம் மற்றும் தடுப்புச்சுவர் அமைத்துத்தர அறிவுறுத்தப்பட்டது. அதன்பேரில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்.

வ. எண்	வார்டு எண்	பணியின் பெயர்	மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)
1.	41	வார்டு எண் 41 க்குட்பட்ட பாரதி நகர் 5வது வீதி பகுதியில் பாலம் மற்றும் தடுப்புச்சுவர் அமைத்தல். (ந.க.எண் 1843 / 2020/MD2)	42.00

மேற்கண்டபணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் ந.க.எண் 1843 / 2020/MD2

மாநகர மன்ற தீர்மானம் எண் 226 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 23

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் பொறியியல் பிரிவு வார்டு எண் 41க்கு உட்பட்ட போலிஸ் குவாட்டர்ஸ் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்.

வ. எண்	**வார்டு எண்**	**பணிகளின் பெயர்**	**மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)**
1.	41	வார்டு எண் 41க் குட்பட்ட போலிஸ் குவாட்டர்ஸ் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல். (ந.க.எண் 1844/ 2020/MD2)	75.00

மேற்கண்டபணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1844 / 2020/MD2

மாநகர மன்ற தீர்மானம் எண் 227 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 24

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் பொறியியல் பிரிவு வார்டு எண் 44க்குட்பட்ட விஜயா நகர் மற்றும் பாலாஜி நகர் பகுதியில் கழிவுநீர் தொட்டி,மழைநீர் வடிகால் மற்றும் கழிவு நீர் மேட்டார் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

அதன் விபரம்

வ. எண்	வார்டு எண்	பணிகளின் பெயர்	மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)
1.	44	வார்டு எண் 44க் குட்பட்ட விஜயா நகர் மற்றும் பாலாஜி நகர் பகுதியில் கழிவுநீர் தொட்டி,மழைநீர் வடிகால் மற்றும் கழிவு நீர் மோட்டார் அமைத்தல் பணிக்கு. (ந.க.எண்:1845 / 2020/MD2)	75.00

மேற்கண்டபணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் ந.க.எண்;. 1845 / 2020/MD2

மாநகர மன்ற தீர்மானம் எண் 228 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 25

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் பொறியியல் பிரிவு வார்டு எண் 46க்குட்பட்ட பூந்தோட்டம் பகுதி மற்றும் மூகாம்பிகை நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்.

வ. எண்	வார்டு எண்	பணிகளின் பெயர்	மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)
1.	46	வார்டு எண் 46க் குட்பட்ட பூந்தோட்டம் பகுதி மற்றும் மூகாம்பிகை நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல். (ந.க.எண் 1846 / 2020/MD2)	30.00

மேற்கண்டபணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1846 / 2020/MD2

மாநகர மன்ற தீர்மானம் எண் 229 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 26

கோயம்புத்தூர் மாநகராட்சி- வடக்கு மண்டலம் வார்டு எண் 47க்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட புகார் மனுவின் அடிப்படையில் பணி செய்யவேண்டி அவசியம் கருதி கீழ்கண்ட பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்.

வ. எண்	வார்டு எண்	பணிகளின் பெயர்	மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)
1.	47	வார்டு எண் 47க்குட்பட்ட காந்தி நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல். (ந.க.எண் 1847 / 2020/MD2)	24.00

மேற்கண்டபணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1847 / 2020/MD2

மாநகர மன்ற தீர்மானம் எண் 230 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 27

கோயம்புத்தூர் மாநகராட்சி- வடக்கு மண்டலம் வார்டு எண் 47க்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட புகார் மனுவின் அடிப்படையில் பணி செய்யவேண்டி அவசியம் கருதி கீழ்கண்ட பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்.

வ. எண்	வார்டு எண்	பணிகளின் பெயர்	மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)
1.	47	வார்டு எண் 47க்குட்பட்ட பழனிஆன்டவர் வீதி பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல். (ந.க.எண் 1848 / 2020/MD2)	35.00

மேற்கண்டபணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1848 / 2020/MD2

மாநகர மன்ற தீர்மானம் எண் 231 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 28

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் பொறியியல் பிரிவு வார்டு எண் 47க்குட்பட்ட காந்தி நகர் சக்தி சாலை சந்திப்பு பகுதியில் பாலம் மற்றும் தடுப்பு சுவர் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்.

வ. எண்	வார்டு எண்	பணிகளின் பெயர்	மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)
1.	47	வார்டு எண் 47க் குட்பட்ட காந்தி நகர் சக்தி சாலை சந்திப்பு பகுதியில் பாலம் மற்றும் தடுப்பு சுவர் கட்டுதல். (ந.க.எண் 1849 / 2020/MD2)	42.00

மேற்கண்டபணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1849 / 2020/MD2

மாநகர மன்ற தீர்மானம் எண் 232 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 29

கோயம்புத்தூர் மாநகராட்சி- வடக்கு மண்டலம் வார்டு எண் 41க்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட புகார் மனுவின் அடிப்படையில் பணி செய்ய அவசியம் கருதி கீழ்கண்ட பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்.

வ. எண்	வார்டு எண்	பணிகளின் பெயர்	மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)
1.	41	வார்டு எண் 41க்குட்பட்ட கண்ணிமார் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல். (ந.க.எண் 1850 / 2020/MD2)	45.00

மேற்கண்டபணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1850 / 2020/MD2

மாநகர மன்ற தீர்மானம் எண் 233 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 30

கோயம்புத்தூர் மாநகராட்சி-வடக்கு மண்டலம் வார்டு எண் 41க்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட புகார் மனுவின் அடிப்படையில் பணி செய்ய வேண்டி அவசியம் கருதி கீழ்கண்ட பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்

வ. எண்	வார்டு எண்	பணிகளின் பெயர்	மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)
1.	41	வார்டு எண் 41க்குட்பட்ட ஓம்சக்தி நகர் மற்றும் ஓம்சக்தி நகர் விரிவு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல். (ந.க.எண் 1851 / 2020/MD2)	70.00

மேற்கண்டபணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1851 / 2020/MD2

மாநகர மன்ற தீர்மானம் எண் 234 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 31

கோயம்புத்தூர் மாநகராட்சி- வடக்கு மண்டலம் வார்டு எண் 41க்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட புகார் மனுவின் அடிப்படையில் பணி செய்ய அவசியம் கருதி கீழ்கண்ட பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்.

வ. எண்	வார்டு எண்	பணிகளின் பெயர்	மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)
1.	41	வார்டு எண் 41க்குட்பட்ட நேரு நகர் 3வது வீதி மற்றும் பாரதி நகர் 3வது வீதி பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல். (ந.க.எண் 1852 / 2020/MD2)	29.00

மேற்கண்டபணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1852 / 2020/MD2

மாநகர மன்ற தீர்மானம் எண் 235 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 32

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.24க்குட்பட்ட சுக்கிரவார்பேட் சாலை ரங்கை கௌடர் வீதி சந்திப்பில் உள்ள பழுதடைந்த பாதளசாக்கடை பிரதான குழாயை அகற்றி விட்டு புதிய பிரதான குழாய் மாற்றி அமைத்தல் பணி மிகவும் அத்தியாவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.25.00 லட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 2053 /2020/எம்.டி.2

மாநகர மன்ற தீர்மானம் எண் 236 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 33

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.23க்குட்பட்ட மேற்கு மண்டல வளாகத்தில் தரை மற்றும் முதல் தளம் வரிவசூல் மையம் கட்டுதல் மற்றும் மேற்கு மண்டல அலுவலகம் அபிவிருந்தி பணி மிகவும் அத்தியாவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.49.50 லட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 2055 /2020/எம்.டி.2

மாநகர மன்ற தீர்மானம் எண் 237 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 34

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.24க்குட்பட்ட ஆசாத் சாலையில் உள்ள அலுவலர் குடியிருப்பு மராமத்து பணி மிகவும் அத்தியாவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.15.00 லட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 2056 /2020/எம்.டி.2

மாநகர மன்ற தீர்மானம் எண் 238 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 35

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.23க்குட்பட்ட மேற்கு மண்டல வளாகத்தில் உள்ள கூட்டரங்கம், மண்டல தலைவர் அறை மற்றும் நிர்வாக அலுவலர் அறை அபிவிருத்தி பணி மிகவும் அத்தியாவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.62.91 லட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 2058 /2020/எம்.டி.2

மாநகர மன்ற தீர்மானம் எண் 239 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 36

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் செயற்கை கால்பந்து மைதானம் அமைத்தல் பணி மிகவும் அத்தியாவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.75.00 லட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 2095/2020/எம்.டி.2

மாநகர மன்ற தீர்மானம் எண் 240 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 37

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் செயற்கை கால்பந்து மைதானம் அமைத்தல் பணி மிகவும் அத்தியாவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.75.00 லட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 2096 /2020/எம்.டி.2

மாநகர மன்ற தீர்மானம் எண் 241 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 38

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலம் வார்டு எண் 86-க்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட பணி மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்,

வ. எண்	வார்டு எண்	வேலையின் பெயர்	மதிப்பீடு ரூபாய் (இலட்சத்தில்)
1.	86	வார்டு எண் 86-க்குட்பட்ட கரும்புக்கடை பகுதியில் சுகாதார மையம் கட்டுதல் பணி. ந.க.எண்.1382/2019/எம்.டி.4	75.00
மொத்தம்			**75.00**

மேற்படி பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.1382/2020/எம்.டி.4

மாநகர மன்ற தீர்மானம் எண் 242 நாள் 20.03.2020

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 39

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

வ எ ண்ண்	பணியின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில்	நிர்வாக அனுமதி நாள்	ஒப்பந்தப் புள்ளி நாள்	பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள்	தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்
1	வார்டு எண்–32 க்குட்பட்ட சேரன்மாநகர் பகுதியில் உள்ள உயர் கோபுர மின் விளக்கு மாற்றி அமைத்தல். ந.க.எண்.10378/2019/எம்டி3	2.95	ம.தீஎண் 308 நாள். 08.11.19	31.01.20 முதலாம் அழைப்பு	1) தி/ள்.ஜெனரல் என்வீரோ டெக் பி லிட் 0.21% குறைவு 2).தி/ள். சபரி எலக்ட்ரிகல்ஸ் 0.97% **அதிகம்**	தி/ள்.ஜெனரல் என்வீரோ டெக் பி லிட் 0.21% குறைவு
2	வார்டு எண்–32 க்குட்பட்ட விளாங்குறிச்சி சேரன் மாநகர் பகுதியில் ஆழ்துளை கிணறு மற்றும் கிணற்றுநீர் பகிர்மான குழாய் அமைத்தல். ந.க.எண்.10183/2019/எம்டி3	3.30	ம.தீஎண் 303 நாள். 08.11.19	29.01.20 முதலாம் அழைப்பு	1).தி/ள்.பூஜா இன்ஜினீயரிங் 0.53% குறைவு 2).தி/ள்.என்.பி.கே. அசோசியேட்ஸ் 4.92% அதிகம்	தி/ள்.பூஜா இன்ஜினீயரிங் 0.53% குறைவு
